### *Salary for employees of State Transport Department*

* 489 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any section of the employees of the State Transport Department have not been paid the salary for January, February and March 1971; and

(*b*) if so, the reasons therefor?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Madras-Tirupathy Bus Service*

* 490 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. he Minister for Transport be pleased to state whether the State Transport Services have been affected in any way by the introduction of a fast-moving train between Madras City and Tirupathy?

*மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :* இல்லை.

*திரு. இ. எஸ். தியாகராசன் :* திருப்பதிக்குச் செல்லும் எக்ஸ்ப்ரஸ் பஸ்களில் இப்போது நெரிசல் இருப்பதால் மேலும் இரண்டு பஸ்கள் விட அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* திருப்பதிக்கு அதிக பஸ்கள் விடுவதற்காக இப்போது ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த போக்குவரத்து அமைச்சரோடு இதுபற்றி பேசி இங்கு எவ்வளவு மைல்கள் ஓடுகிறதோ அந்த அளவிற்கு பஸ்களை அதிகப்படுத்தி ஆந்திரப் பகுதியில் ஓட்டுவதற்கான ஒரு ஒப்பந்தம் இப்போது தயாராக இருக்கிறது. ஆகவே அதன் மூலம் அதிக பஸ்கள் விடும் வாய்ப்பிருக்கிறது.

### ஓட்டுநர்களிடம் பேருந்துப்பொறுப்பை ஒப்படைத்தல்

* 491. வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஓட்டுநர் இருவரிடம் ஒவ்வொரு பேருந்தின் பொறுப்பும் ஒப்படைக்கப் படும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* வலவர்கள் இருவரின் பொறுப்பில் ஒரு பேருந்தை ஒப்படைக்கும் முறைமை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் செயற்குறிப்பில் இருக்கிறது.

*திரு. எம். சுரேந்திரன் :* தலைவரவர்களே, தற்போது அரசாங்கப் பேருந்து களில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு டிரைவர்களை மாற்றிக்கொண்டு இருக் கிறார்கள். அதனால் அவர்களுக்கு பஸ்ஸின் மேல் இருக்கும் பொறுப்பு குறைந்து விடுகிறது. என்னென்ன மாதிரி தவறு நடந்து இருக்கிறது என்று அடுத்த நாள் அவர்கள் பொறுப்பேற்காததால் கவனிக்காமல் விட்டு விடுகிறார்கள். அதோடு ஒரு வண்டியிலிருந்து இன்னொரு வண்டிக்கு ஸ்பேர் பார்ட்ஸ் எடுத்துப் போடுகிறார்கள். ஆகவே, இவைகளை நீக்கும் வகையில்,